**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.150/2025**

**Prosecution witness : அ.சா. 9** **Date : 17.07.2025.**

| Name : சீனிவாசன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 1 absent. Petition filed and allowed) (Accused no.2 present)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.08.2016–ம் தேதி கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் தலைமைக்காவலர் சேகர் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த தங்கவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.45/2025 u/Sec. 2964(பி), 115(2),118(1), BNSS** ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ5** ஆகும்.

3. பிறகு நான் கடந்த 04.02.2025 ம் தேதி காலை 7 மணிக்கு சம்பவ இடம் கரட்டுபட்டி, பணங்கரடு மதியழகன் வீட்டு முன்பு சென்று சாட்சிகள் ஆண்டியப்பன் மற்றும் பிராசாந்த் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். வரைபடம் **அ.சா.ஆ6** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் தங்கவேல், யமுனா, அலமேலு, முனுசாமி, ஆண்டியப்பன் பிராசந்த் மருத்துவர் சுரேந்தர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த தங்கவேல் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுரேந்தர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன்.

5. இவ்வழக்கின் எதிரிகள் கடந்த 08.02.2025 ம் தேதி ஆகியோர் கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார்கள்,

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 03.01.2014ம் தேதி **நி.கு.எண்.45/2025 u/Sec. 2964(பி), 115(2),118(1), BNSS** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

7. சம்பவம் எந்த தேதியில் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 02.02.2025ம் தேதி மாலை 4 மணிக்கு நடந்தது. சம்பவம் நடைபெற்ற விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 02.02.2025ம் தேதி மாலை 5.30 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததாக இரவு 09.00 மணிக்கு தகவல் கிடைக்கப்பெற்றது. தகவல் கிடைத்தவுடன் மறுநாள் வாக்குமூலம் பதியப்பட்டு சம்பவயிடம் சென்றேன்.

8. சம்பவயிடத்திற்கு உடனடியாக நேரடியாக சென்று பார்க்கவில்லை என்றால் மருத்துவமனைக்கு சென்று காயம் அடைந்த நபர்களை பார்த்துவிட்டு பிறகு சம்பவயிடம் சென்று பார்த்தேன். முதல் தகவல் அறிக்கை எந்த தேதியில் எத்தனை மணிக்கு போட்டேன் என்றால் 03.02.2025ம் தேதி 19.00 மணிக்கு போட்டேன்.

9. நேரடியாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் தகவல் வந்ததன் பேரில் புகார் வாக்குமூலம் பதியப்பட்டது. மருத்துவமனையில் வாக்குமூலம் பதிவு செய்த காவலர் என்னிடம் எத்தனை மணிக்கு சமர்பித்தார் என்றால் 03.02.2025ம் தேதி 19.00 மணிக்கு சமர்பித்தார். சம்பவம் பற்றிய தகவல் முழுமையாக தெரியும் என்றால் ஆமாம்.

10. சம்பவம் நடைபெறுவதற்கு முன்பாக ஒரு நிகழ்ச்சிக்கு சென்றதாக சொல்லும் நிலையில் அது எந்த நிகழ்ச்சி என்றால் சீர் என்ன சீர் என்று தெரியாது. எந்த உறவினர் நிகழ்ச்சியில் அ.சா.1 கலந்து கொண்டார் என்றால் அக்கா உறவு முறையான வீட்டில் கலந்து கொண்டார். சம்பவம் இடத்திற்கு எப்போது சென்றேன் என்றால் 4ம் தேதி காலை 7 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்தில் யாரேனும் நபரை அழைத்து விசாரித்தேனா என்றால் தங்கவேல், யமுனா, அலமேலு, முனுசாமி ஆகியோரை விசாரித்தேன்.

11. அன்றைய தினமே வாக்குமுலத்தை பதிவு செய்தேனா என்றால் ஆமாம். சம்பவம் யாருடைய இடத்தில் நடந்தது என்றால் எதிரி மதியழகன் வீட்டில் நடந்தது. மதியழகன் வீட்டிற்கு புகார்தாரர் மற்றும் அவருடைய உறவினர் சென்று பிரச்சனை செய்தார்கள் என்றால் இல்லை. புகார்தாரர் அவர்களை மருத்தவமனையில் சென்று எத்தனை மணிக்கு எப்போது பார்த்தேன் என்றால் 3ம் தேதி காலை 8 மணிக்கு பார்த்தேன்.

12. புகார்தாரர் எந்த மனநிலை இருந்தார் என்றால் சுயநினைவில் இருந்தார். வழக்கில் 1ம் எதிரியின் சாருலதா 2ம் எதிரியாக சேர்க்கபட்டு இந்த வழக்கிலிருந்து எதற்காக நீக்கபட்டார் என்றால் சாட்சியம் விசாரித்த நிலையில் பிரச்சனை இருதரப்பினையும் சண்டையை விலக்கிவிட்ட நிலையில் இருந்ததால் நீக்கினேன். மேற்சொன்ன வகையில் புகார்தாரர் மருத்துவமனையில் வாக்குமுலம் அளித்தார் என்றால் ஆமாம்.

13. என் முன்னிலையில் தலைமை காவலர் புகார்தாரர் சொல்ல சொல்ல மேற்சொன்னவகையில் தான் எழுதினார். எனது அறிக்கையில் புகார்தாரர் பதட்டத்தில் இருந்ததால் நான் சாருலதா பெயரை செல்லிவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் சொன்ன வாக்குமுலம் உண்மைதன்மை உடையது இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்லபட்டவாக்குமுலம் என்றால் சரியல்ல. சாட்சிகளை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன்.

14. சம்பவ இடத்தில் ஏதேனும் பொருட்கள் கைப்பற்ற தா என்றால் இல்லை. சம்பவ த்திற்கு பின்னிட்டு எந்த வகையான அம்புலன்ஸ் வந்தது என்றால் ஒரு அரசு மற்றும் இன்னோரு தரப்பில் தனியார் ஆம்புலன்ஸ் செல்கிறார்கள். அரசு அம்புலன்ஸ்லில் மதியழகன் மற்றும் மகேஸ்வரி சாருலதா முன்று பேரும் ஏறிய பிறகு புகார்தாரர் பிரச்சனை செய்தாரா என்றால் இல்லை. உண்மையில் புகார்தாரர் தான் அம்புலனஸ் நிறுத்தி பிரச்சனை செய்தார் என்றால் இல்லை.

15. புகார்தாரர் மற்றும் அவருடைய ஆட்கள் தான் எதிரிகளின் மீது தாக்கல் செய்து விட்டு அதனை கொடுத்த பின்னர் அதனை சரிவர விசாரிக்காமல் தற்போது பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் இல்லை. சாருலதா வை மதியழகன் திருமணம் செய்ய கட்டாயபடுத்தியது சம்பந்தமாக சாருலதா புகார் கொடுத்துள்ளார் என்றால் மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்திருந்தார்கள். அது பொய் என்று புகார் முடிக்கபட்டது. புகார்தாரர் கொடுத்த பொய் புகாரை நான் சரிவர விசாரிக்காமல் எதிரிகளின் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.